**<u>மதுக்கரை நகராட்சியில் 30.08.2022ம் நாள் நடைபெற்ற அவசர மன்றக்கூட்டத்தின் தீர்மானம் நகல்கள்.</u>**

**மன்றப் பொருள் எண்.01**

கோயம்புத்தூர் ராமநாதபுரம் ஐயர் ஆஸ்பத்தி லேஅவுட் விநாயகா மீடியாஸ் நிறுவனத்தாரின் 28.07.2022ம் நாளிட்ட கடிதத்தில் மதுக்கரை நகராட்சி கீழ்காணும் இடங்களில் பேருந்துகள் செல்லும் பாதையில் பொது மக்கள் பேருந்து நிறுத்தத்திற்காக காத்திருக்கும் சாலை மார்க்கத்தில் நிழல் குடை ஏதும் இல்லாததால் மழை மற்றும் வெயில் காலங்களில் பொது மக்கள் சிரமத்தை தவிர்க்க நிழற்குடை அமைத்துக் கொடுக்க விருப்பம் தெரிவித்துள்ளார்.

**<u>பயணிகள் நிழற்குடை அமைக்கும் இடங்கள்</u>**

1. மதுக்கரை லாரி ஆபிஸ் அருகில் – 1
2. மதுக்கரை போலீஸ் ஸ்டேஷன் எதிர்புறம் – 1
3. மதுக்கரை மரப்பாலம் இருபுறமும் – 2
4. மதுக்கரை நடராஜ் மருத்துவமனை அருகில் – 1
5. மதுக்கரை மார்க்கெட் இருபுறமும் – 2
6. மதுக்கரை குரும்பபாளையம் பிரிவு சுந்தராபுரம் சாலை – 1

இந்நிலையில் பொது மக்களின் நலன் கருதி மேற்கண்ட 6 இடத்தில் விநாயகா மீடியாஸ் நிறுவனத்தாரின் சொந்தச் செலவு உரிய மதிப்பீட்டில் நிழல் குடை அமைத்துக் கொடுத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்காக நகராட்சியில் ஒப்படைக்க விரும்புவதாகவும் மேற்கண்ட சாலை மார்க்கத்தில் பொது மக்களின் நலன் கருதி போக்குவரத்திற்கு இடையூறு இன்றி நிறுவனத்தாரின் சொந்தச் செலவில் நிழற்குடைகள் எட்டு எண்ணிக்கையில் கட்டிக் கொடுக்க அனுமதி வழங்குமாறும் அவற்றில் 12 ஆண்டுகளுக்கு விளம்பரம் செய்வதாகவும் தெரிவித்துள்ளார்.

மேற்காணும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக நிறுவனத்தின் சொந்தச் செலவில் நிழற்குடை அமைத்துக்கொடுக்க திருவாளர்கள். விநாயகா மீடியாஸ் அவர்கள் தானாக முன்வந்துள்ளதால் அவ்விடத்தில் பொது போக்குவரத்திற்கு இடையூறு இன்றி நிழற்குடை அமைக்க நெடுஞ்சாலைத்துறையிடம் தடையின்மை சான்று பெற்று நிழற்குடைக்கான கட்டடம் கட்ட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.933/2021/அ1)

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1) திருவாளர்கள். விநாயகா மீடியாஸ் நிறுவனத்தின் மக்கள் தொண்டினை மன்றத்தில் பாராட்டு தெரிவிக்கலாம்.
2) நெடுஞ்சாலைத்துறையின் அனுமதி பெற்று மதுக்கரை நகராட்சி எட்டு இடங்களில் மேற்படியாரின் சொந்தச் செலவில் பேருந்து நிழற்குடை கட்டிக்கொடுத்து அவற்றில் விளம்பரங்கள் செய்து கொள்ளவும் பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.69</u>**

1) குவாரி ஆபீஸ் அருகில்
2) பாலத்துறை சாலையில் – 2 Nos
3) அரசு மேல்நிலை பள்ளி அருகில்
4) அறிவொளி நகர் பள்ளி அருகில்

பயணிகள் நிழற்குடை அமைக்கும் இடங்களில் வரிசை எண். 1ல் மதுக்கரை லாரி ஆபீஸ் என்பதை மதுக்கரை குவாரி ஆபீஸ் அருகில் என திருத்தம் செய்தும், கூடுதலாக மேற்காணும் இடங்களில் பயணிகள் நிழற்குடைகள் அமைத்துக் கொடுக்கவும் அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப் பொருள் எண்.02**

மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் மதுக்கரையிலுள்ள மூன்று அரசு ஆரம்ப பள்ளியில் பயிலும் 730 மாணவ மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி வழங்க ஒருங்கிணைந்த சமையற்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையத்திலிருந்து காலை சிற்றுண்டி தயார் செய்து வழங்குவதற்காக திறந்த ஒப்பந்தபுள்ளிகள் 26.08.2022ல் கோரியதில் கீழ்காணும் ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒரு மாணவர்களுக்கு உணவு வழங்கசெலவு ரூபாய் |
|---|---|---|
| 1 | No Food Waste<br>No.4,1st street<br>Kothari Layout<br>Singanallur, Coimbatore. | ரூ.12.65 பைசா |
| 2 | SKP Enterprises<br>44/22, Archanari street<br>Samynathapuram<br>Salem. | ரூ.15.75 பைசா |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர் No Food Waste, கோயம்புத்தூர் நிறுவனத்தாரின் விலை விகிதத்தை ஏற்று வேலை உத்தரவு வழங்குவதற்கும் அதற்கான செலவினத்தை நகராட்சி நிதியிலிருந்து வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 809/2022/அ1)

**<u>தீர்மானம் எண்.70</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப் பொருள் எண்.03**

மதுக்கரை நகராட்சி 2022 –2023 ஆம் ஆண்டு சாலையோர வியாபாரிகள் கணக்கெடுப்பு பணியினை மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் உள்ள அனைத்து சாலையோர வியாபாரிகளையும் பயோமெட்ரிக் முறையில் கணக்கெடுத்து புவிசார் தகவல்கள் பதிவு செய்து அவற்றிற்கு ஜியோ மேப்பிங் செய்து பயோமெட்ரிக் அடையாள அட்டை மற்றும் சான்றிதழ் வழங்க ஒரு நபர்க்கு விலை விகிதம் குறித்து கடந்த 19.07.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் வருமாறு

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் விலாசம் | ஒப்பந்தப்புள்ளியின் விலை | மதிப்பீட்டை விட கூடுதல்/குறை |
|---|---|---|---|
| 1 | M/s. Mirifical Careers Pvt,Ltd<br>No.12A, Second Floor, K.K Building,<br>T.Nagar, Ramanathapuram,<br>Coimbatore- 641045. | ரூ.700 | –70.83% குறைவு |
| 2 | M/s. Bharathi HR Consultancy<br>8, South Canal Bank Road,<br>Mandaveli, Chennai-600028. | ரூ.850 | –64.58% குறைவு |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள M/s. Mirifical Careers Pvt Ltd, நிறுவனத்தாரின் விலை விகிதத்தினை ஏற்று வேலை உத்தரவு வழங்குவதற்கும் அதற்காகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 747/2022/அ1)

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுதிக்கலாம்
2. தெருவோர வியாபாரிகளுக்கு கடனுதவி வழங்க வேண்டியதன் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. Mirifical Careers Pvt Ltd, நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.71**

1. அனுமதிக்கப்பட்டது.
2. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப் பொருள் எண்.04**

கோயம்புத்தூர் மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குனர் அவர்களின் ந.க.எண்.8960/2021/உதிகு நாள்.19.05.2022ன்படி மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட க.ச.எண்.836/2A, 2Bல் 2.20 ஏக்கர் பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திரு. N. முகமது நொவ்ஃபால் மற்றும் 5 நபர்களுக்கு திட்ட அனுமதி எண் 152/2022 என எண்ணிடப்பட்டு ம.வ (கோ.உ.தி.கு)

எண்: 128/2022ன்படி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரரால் பொது ஒதுக்கீடு மற்றும் ரோடு தான செட்டில்மெண்ட் ஆகியன மதுக்கரை சார்பதிவாளர் அலுவலக பத்திர பதிவு எண்.229/2022 நாள்.11.01.2022 ன்படி 3072.85 சதுர மீட்டர் விஸ்தீரணம் உள்ள சாலை பரப்பும் 47.56 சதுர மீட்டர் பரப்பு கொண்ட பொது ஒதுக்கீடு இடமும் தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்திற்கு 39.01 சதுர மீட்டர் இடமும் நகராட்சிக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளது. மனைப்பிரிவில் சாலைகள் தார்சாலைகளாகவும், அடிப்படை வசதிகளான வடிகால், சிறுபாலங்கள், தெருவிளக்கு மற்றும் குடிநீர் குழாய் வசதிகள் ஏற்படுத்தவும் உரிய கட்டணங்கள் வசூலித்து மனைப்பிரிவு இறுதி உத்தரவு வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.844/2021/அ1)

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றத்தில் அங்கீகரிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.72</u>

அங்கீகரிக்கப்பட்டது.

---

**மன்றப் பொருள் எண்.05**

இந்நகர் மன்றத் தீர்மானம் எண்.68, நாள். 29.07.2022 ன் படி 19வது வார்டு மரப்பாலம் பாடசாலை வீதி பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து வார்டு எண்.19, 20 மற்றும் 23 ஆகிய பகுதிகளுக்கு தண்ணீர் விநியோகிக்கும் பணிக்கு ரூ.4.40 லட்சம் செலவினத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கு 18.08.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் வருமாறு

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் விலாசம் | ஒப்பந்தப் புள்ளியின் விலை | மதிப்பிட்டைவிட கூடுதல்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | தி/வா. ஓம்சாய் டிரேடிங் கம்பெனி<br>1053/2A குரும்பபாளையம் ரோடு,<br>மதுக்கரை | ரூ.439208/– | –0.18% குறைவு |
| 2 | திரு. எம். மகேந்திரன்<br>9/343H, சூட்டிங் ரேஞ்ச் ரோடு,<br>காந்தி நகர், மதுக்கரை | ரூ.444840/– | 0.10% கூடுதல் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள தி/வா. ஓம்சாய் டிரேடிங் கம்பெனி நிறுவனத்தின் விலை விகிதத்தினை ஏற்று வேலை உத்தரவு வழங்குவதற்கும் அதற்காகும் செலவினத்தை நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 916/2022/அ1)

**அலுவலக குறிப்பு**

பொதுமக்களுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியதன் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரர் தி/வா. ஓம்சாய் டிரேடிங் கம்பெனி நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.73**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப் பொருள் எண்.06**

இந்நகர் மன்றத் தீர்மானம் எண்.67, நாள். 29.07.2022 ன் படி 2வது வார்டு அறிவொளி நகர் அண்ணா சதுக்கம் பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் விநியோகிக்கும் பணிக்கு ரூ.4.50 லட்சம் செலவினத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கு 18.08.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் வருமாறு

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் விலாசம் | ஒப்பந்தப் புள்ளியின் விலை | மதிப்பிட்டைவிட கூடுதல்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | தி/வா. ஓம்சாய் டிரேடிங் கம்பெனி<br>1053/2A குரும்பபாளையம் ரோடு,<br>மதுக்கரை | ரூ.449325/– | –0.15% குறைவு |
| 2 | திரு. எம். மகேந்திரன்<br>9/343H, சூட்டிங் ரேஞ்ச் ரோடு,<br>காந்தி நகர், மதுக்கரை | ரூ.454410/– | 0.98% கூடுதல் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள தி/வா. ஓம்சாய் டிரேடிங் கம்பெனி நிறுவனத்தின் விலை விகிதத்தினை ஏற்று வேலை உத்தரவு வழங்குவதற்கும் அதற்காகும் செலவினத்தை நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 916/2022/அ1)

**அலுவலக குறிப்பு**

பொதுமக்களுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியதன் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரர் தி/வா. ஓம்சாய் டிரேடிங் கம்பெனி நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.74**

15வது வார்டு ஆழ்துளை கிணறு அமைத்தல் அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

## மன்றப் பொருள் எண்.07

இந்நகர் மன்றத் தீர்மானம் எண்.66, நாள். 29.07.2022 ன் படி 10வது வார்டு பாரதி காலனியில் உள்ள மேல்நிலை குடிநீர் தொட்டியிலிருந்து மெகா சிட்டி பகுதி வரை புதிதாக பிவிசி குழாய்கள் பதித்து குடிநீர் வழங்கும் பணிக்கு ரூ.6.50 லட்சம் செலவினத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கு 18.08.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் வருமாறு.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிதாரார் பெயர் மற்றும் விலாசம் | ஒப்பந்தப் புள்ளியின் விலை | மதிப்பிட்டைவிட கூடுதல்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு. எம். மகேந்திரன்<br>9/343H, சூட்டிங் ரேஞ்ச் ரோடு,<br>காந்தி நகர், மதுக்கரை | ரூ.647725/– | –0.35% குறைவு |
| 2 | திரு. வி. மயில்சாமி<br>14/14 கடை வீதி,<br>மதுக்கரை | ரூ.653055/– | 0.47% கூடுதல் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள திரு. எம். மகேந்திரன் என்பவரின் விலை விகிதத்தினை ஏற்று வேலை உத்தரவு வழங்குவதற்கும் அதற்காகும் செலவினத்தை நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 915/2022/அ1)

### <u>அலுவலக குறிப்பு</u>

பொதுமக்களுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியதன் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரார் திரு. எம். மகேந்திரன் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

### <u>தீர்மானம் எண்.75</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

## மன்றப் பொருள் எண்.08

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.31117/2021/CFC நாள்.20.06.2022ன்படியும் மற்றும் இந்நகர் மன்றத் தீர்மானம் எண்.61, நாள். 29.07.2022ன்படியும் 15வது நிதிக்குழு மான்யம் Untied grant 2021–2022ன் கீழ் ரூ.35.22 லட்சம் மதிப்பீட்டில் மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட 3 வது வார்டு கலைஞர் நகர் மெயின் ரோடு Unicode 169003 R 0012 நீளம் 250 மீ அகலம் 4.50 மீட்டர் கலைஞர் நகர் முதல் குறுக்கு சாலை Unicode 16900R0013 நீளம் 180 மீ அகலம் 4.50 மீ, கலைஞர் நகர் 2 வது குறுக்கு சாலை 16900R0014 நீளம் 128 மீ அகலம் 4.50மீ ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணிக்கு மன்றத்தில்

அனுமதிக்கப்பட்டதற்கு கடந்த 28.07.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் வருமாறு

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் விலாசம் | ஒப்பந்தப் புள்ளியின் விலை | மதிப்பீட்டை விட கூடுதல்/குறை |
|---|---|---|---|
| 1 | தி/வா. ஆர்.கே.பில்டர்ஸ்,<br>16/137, சரஸ்வதி நகர்,<br>மரப்பாலம், மதுக்கரை. | ரூ.35,15,308.20/– | 0.19% குறைவு |
| 2 | தி/வா. மல்லையன் இன்பராஸ்டக்சர்,<br>16/173பி, பாலக்காடு மெயின் ரோடு,<br>மரப்பாலம், மதுக்கரை. | ரூ.37,85,156.40/– | 6.62% கூடுதல் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள தி/வா. ஆர்.கே.பில்டர்ஸ், நிறுவனத்தாரின் விலை விகிதத்தினை ஏற்று வேலை உத்தரவு வழங்குவதற்கும் அதற்காகும் செலவினத்தை 15வது நிதிக்குழு மான்யம் Untied grant நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 685/2022/அ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுதிக்கலாம்.
2. பொதுமக்களுக்காக திட்டப்பணியை உடனடியாக செய்து முடிக்க வேண்டியதன் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று தி/வா. ஆர்.கே. பில்டர்ஸ், நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.76</u>**

1. அனுமதிக்கப்பட்டது.
2. அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

**மன்றப் பொருள் எண்.09**

இந்நகராட்சியின் உழுவை ஓட்டுநர் திரு. சி. சாமிநாதன் அவர்களின் 18.07.2022ம் நாளிட்ட கடிதத்தின்படி இந்நகராட்சிக்குச் சொந்தமான பொது சுகாதாரப்பிரிவு வாகனம் எண்.TN99R1382 டம்பர் பிளேசர் வாகனத்திற்கு இன்ஜின் ஆயில் சர்வீஸ் செய்ய வேண்டும் எனவும் அறிக்கை செய்துள்ளார். மேற்கண்ட விபரத்திற்கு வாகன இன்ஜின் ஆயில் சர்வீஸ் பணிகளுக்கு 21.07.2022ம் நாளில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் வருமாறு.

| வ.எண் | நிறுவனத்தாரின் பெயர் மற்றும் விலாசம் | விலைப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1 | திருவாளர்கள். தேஜஸ்வினி ஆட்டோ<br>எண்.509ஜி செட்டிபாளையம் ரோடு<br>மதுக்கரை. | ரூ.14442/– |

| | | |
|---|---|---|
| 2 | திருவாளர்கள். ஸ்ரீ சரவணா ஆட்டோ கேரேஜ்<br>எண்.33 சரஸ்வதி தெரு எண்.1<br>மருதமலை மெயின் ரோடு<br>பி.என்.புதூர்<br>கோயம்புத்தூர் | ரூ.15358/– |
| 3 | திருவாளர்கள். ஸ்ரீ மூகாம்பிகை ஆட்டோ<br>அண்டு டீசல் ஒர்க்ஸ்<br>எண்.5A காமராஜ் தெரு<br>காவேரி நகர்<br>மேட்டுப்பாளையம் ரோடு<br>கோயம்புத்தூர். | ரூ.15451/– |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர். தேஜஸ்வினி ஆட்டோ, மதுக்கரை நிறுவனத்தாரின் விலை விகிதத்தினை ஏற்று வேலை உத்தரவு வழங்கியதற்கும், அதற்கான செலவினம் மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.886 /2022/அ1)

**அலுவலக குறிப்பு :**

பொதுமக்களின் சுகாதார நலன் கருதி அவசர அவசியமாக நகர் மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளிதாரர் திருவாளர். தேஜஸ்வினி ஆட்டோ நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்கியதற்கும் அதற்கான செலவினம் மேற்கொண்டதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.77**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

**மன்றப் பொருள் எண்.10**

இந்நகராட்சியின் ஓட்டுநர் திரு. வி. விமல்குமார் அவர்களின் 04.08.2022ம் நாளிட்ட கடிதத்தின்படி இந்நகராட்சிக்குச் சொந்தமான பொது சுகாதாரப்பிரிவு வாகனம் எண்.TN99BV7463 டாடா ஏசி வாகனத்திற்கு டைனமோ மற்றும் ஷிட்டர் பேன் பழுது சரிசெய்ய வேண்டும் எனவும் அறிக்கை செய்துள்ளார். மேற்கண்ட விபரத்திற்கு வாகன டைனமோ மற்றும் ஷிட்டர் பேன் பழுது சரிசெய்யும் பணிகளுக்கு 05.08.2022ம் நாளில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் வருமாறு.

| வ.எண் | நிறுவனத்தாரின் பெயர் மற்றும் விலாசம் | விலைப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1 | திருவாளர்கள். தேஜஸ்வினி ஆட்டோ<br>எண்.509ஜி செட்டிபாளையம் ரோடு<br>மதுக்கரை. | ரூ.4938/– |

| | | |
|---|---|---|
| 2 | திருவாளர்கள். ஸ்ரீ சரவணா ஆட்டோ கேரேஜ்<br>எண்.33 சரஸ்வதி தெரு எண்.1<br>மருதமலை மெயின் ரோடு<br>பி.என்.புதூர், கோயம்புத்தூர் | ரூ.5407/– |
| 3 | திருவாளர்கள். ஸ்ரீ மூகாம்பிகை ஆட்டோ<br>அண்டு டீசல் ஒர்க்ஸ்<br>எண்.5A காமராஜ் தெரு<br>காவேரி நகர், மேட்டுப்பாளையம் ரோடு<br>கோயம்புத்தூர். | ரூ.5502/– |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர். தேஜஸ்வினி ஆட்டோ, மதுக்கரை நிறுவனத்தாரின் விலை விகிதத்தினை ஏற்று வேலை உத்தரவு வழங்கியதற்கும், அதற்கான செலவினம் மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.983 /2022/அ1)

**அலுவலக குறிப்பு :**

பொதுமக்களின் சுகாதார நலன் கருதி அவசர அவசியமாக நகர் மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளிதாரர் திருவாளர். தேஜஸ்வினி ஆட்டோ நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்கியதற்கும் அதற்கான செலவினம் மேற்கொண்டதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.78**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

**மன்றப் பொருள் எண்.11**

மதுக்கரை நகராட்சியில் 2022–2023ம் ஆண்டில் கட்டிட வரைபட வரைவாளராக பதிவு செய்து தர கோரியுள்ள கீழ்காணும் விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | விண்ணப்பதாரர் பெயர் மற்றும் முகவரி | விண்ணப்பித்த நாள் | கல்வித்தகுதி |
|---|---|---|---|
| 1 | A. ராஜ்குமார்<br>125 குமரன் கார்டன்,<br>இடையர்பாளையம் பிரிவு,<br>மாநகராட்சி அலுவலகம் எதிரில்,<br>குனியமுத்தூர், கோயம்புத்தூர்–641008. | 12.07.2022 | BE Civil |
| 2 | R. சுரேஷ்<br>620 தெலுங்கு வீதி,<br>காந்தி பார்க் அருகில்,<br>கோயம்புத்தூர்–641001. | 08.03.2022 | Diploma in Civil Engineering |

மேற்கண்ட விண்ணப்பதாரர்கள் தொழில்நுட்பக்கல்வித்தகுதி பெற்றுள்ளதால், அவர்களை நகராட்சி கட்டிட விதிகளுக்கு உட்பட்டு கட்டிட வரைபட வரைவாளராக பதிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.853/2022/அ1, 222/2022/அ1)

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.79**

அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப் பொருள் எண்.12**

அரசாணையின்படி தரம் உயர்த்தப்பட்ட மதுக்கரை நகராட்சியில் ஏற்கனவே இருந்த பிரிமேட்டிக்ஸ் மென்பொருள் மாற்றப்பட்டு தற்போது நகராட்சிக்கென யுடிஐஎஸ் என்னும் புதிய மென்பொருள்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இப்புதிய மென்பொருளை பயன்படுத்துவதற்கு தற்போதுள்ள வெர்சனில் கணினிகள் இருந்தால் தான் அவைகள் நிர்வாகத்திற்கு உகந்ததாக இருக்கும்.

எனவே, இந்நகராட்சி தற்போதுள்ள கணினிகள் அனைத்தும் பழையதாக ஆகிவிட்டதால் புதிதாக கணிப்பொறி உபகரணங்கள் வாங்கி பயன்படுத்தப்பட வேண்டியுள்ளது. இதன் விபரத்திற்கு கடந்த 04.08.2022 ல் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் வருமாறு.

| வ.எண் | நிறுவனத்தாரின் பெயர் மற்றும் விலாசம் | கணிப்பொறியின் விலை விகிதம் ரூபாய் |
|---|---|---|
| 1 | சிஸ்கான் சிஸ்டம்ஸ்<br>கோயம்புத்தூர் | ரூ.14,70,409/– |
| 2 | சாகர் எலக்ட்ரானிக்ஸ்<br>பொள்ளாச்சி | ரூ.15,34,944/– |
| 3 | கே.எஸ். இன்போடெக்<br>உடுமலைப்பேட்டை | ரூ.15,54,980/– |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர் சிஸ்கான் சிஸ்டம்ஸ் கோயம்புத்தூர் நிறுவனத்தாரின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று தேவையான கணினி உபகரணத்திற்கு விநியோக உத்தரவு வழங்குவதற்கும் அதற்காகும் செலவினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 949/2022/அ1)

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.80</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப் பொருள் எண்.13**

மெட்ராஸ் உயர்நீதி மன்றத்தின் நீதிப் பேராணை மனு எண்.18828/2022ன்படி மதுக்கரை காந்தி நகர் கதவு எண்.3/397ல் வசிக்கும் திரு. என். சின்னச்சாமி அவர்களின் மகன் திரு. சி. துரைச்சாமி என்பவரால் அவரின் வீட்டிற்கு அருகில் உள்ள திருவாளர்கள் பாலவிநாயகா மோட்டார்ஸ் நிறுவனம் செயல்படுவதால் அங்கிருந்து எழுப்பப்படும் ஒளி மற்றும் ஒலி தனக்கு தொள்ளை கொடுப்பதாகவும் இவற்றை உடனடியாக வேறு இடத்திற்கு மாற்றம் செய்யுமாறும் தெரிவித்து நகராட்சி ஆணையாளரையும் பிரிதி வாதியாக சேர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளார்.

மேற்கண்ட வழக்கிற்கு நகராட்சி சார்பாக வக்காலத்து கொடுத்து எதிர்வாதுரை தாக்கல் செய்யும் பொருட்டு அதற்கான செலவு ரூ.20000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) வழங்குமாறு மெட்ராஸ் உயர்நீதிமன்ற சிறப்பு அரசு வழக்கறிஞர் திரு. டி. சீனிவாசன் அவர்கள் 04.07.2022ம் நாளில் இந்நகராட்சிக்கு கடிதம் மற்றும் இதர ஆவணங்களை அனுப்பி வைத்துள்ளார்.

மேற்கண்ட விபரத்திற்கு நீதிப்பேராணை மனு எண்.18828/2022ஐ மதுக்கரை நகராட்சி சார்பாக எடுத்து நடத்தவும் அதற்கான வழக்கு செலவு ரூ.20000/–ஐ நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.822/2022/அ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.81</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப் பொருள் எண்.14**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நாமக்கல்லில் 03.07.2022ம் நாளில் நடைபெற்ற நகர்புற உள்ளாட்சி பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வருகை புரிந்ததை வாழ்த்தி வரவேற்கும் விதத்தில் கோயம்புத்தூர் மற்றும் நாமக்கல் மாவட்டத்தின் தினசரி தமிழ் நாளிதழ்களில் விளம்பரம் செய்த வகையில் விளம்பரக் கட்டணம் ரூ.4,59,480/–ஐ வழங்க கோரி கிராப்பிக் ஆர்ட்ஸ் இண்டஸ்டீஸ் நிறுவனத்தாரின் 04.07.2022ம் நாளிட்ட விலைப்பட்டியல் எண்.634ன்படி பட்டியல் வரப்பெற்றுள்ளது.

மேலும் மாலை தமிழகம் நிறுவனத்தாரின் விலை பட்டியல் எண்.MT5032/2022–2023 நாள்.08.07.2022ன்படி விளம்பரக் கட்டணம் ரூ.15750/– வழங்க கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது.

மேற்கண்ட இரண்டு நாளிதழ் நிறுவனத்திற்கும் மொத்த விளம்பரக் கட்டணம் ரூ.**475230/–** ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண்.867/2022/அ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.82</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப் பொருள் எண்.15**

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள் கடிதம் ந.க.எண்.**4170/2022**/கொ**2**, நாள்.**20.08.2022**ம் நாளிட்ட உத்தரவின்படி கோயம்புத்தூர் மாவட்டம் மதுக்கரை நகராட்சி பகுதியில் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் பொதுசுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருத்துவத் துறையினரால் வருமுன் காப்போம் திட்டத்தின் கீழ் **08.07.2022** அன்று மருத்துவ முகாம் நடைபெற்றதற்கு நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டுச் செலவினங்களை மதுக்கரை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மேற்கண்ட நிகழ்ச்சிக்கான விழா மேடை, பந்தல், சேர்கள், ஒலி மற்றும் ஒளி அமைப்பு, சாமியானங்கள் உள்ளிட்ட இதர மொத்த செலவினங்கள் ரூ.**483000/–** க்கு (ரூபாய் நான்கு லட்சத்து எண்பத்தி மூன்றாயிரம் மட்டும்) பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட செலவினங்களை நகராட்சி நிதியிலிருந்து பட்டுவாடா செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது **(ந.க.எண்.1030/2022/அ1).**

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.83</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப் பொருள் எண்.16**

**1920**ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு **15**ன்கீழ் செயலாட்சி அதிகாரியின் நெருக்கடிகால அதிகாரங்களின்படி அவசர அவசியப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் வேலை விபரப்பட்டியல்கள்.

| வரிசை எண் | அவசர அவசிய பொது வேலைகள் விபரம் | செலவினத் தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | மதுக்கரை நகராட்சி 14வது வார்டு அன்னை நகர் பகுதியில் இருந்த பலமையான குடிநீர் குழாய்கள் பழுது ஏற்பட்டு குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டதால், தண்ணீர் வீனாவதை தடுக்க வேண்டியதன் அவசர அவசியம் கருதி இப்பகுதியில் புதிதாக குடிநீர் குழாய்கள் பதித்து பொதுமக்களுக்கு தட்டுப்பாடின்றி குடிநீர் விநியோகம் செய்யும் வேலை மேற்கொள்ளப்பட்டது. | ரூ.30000/– |
| 2 | மதுக்கரை நகராட்சி 2வது வார்டு அறிவொளிநகர் பகுதி மக்களின் பயன்பாட்டில் இருந்த கழிப்பாறையின் கோப்பைகள் பழுதாகியிருந்தவைகளை உடனடியாக மாற்றம் செய்ய வேண்டியதன் அவசர அவசியம் கருதி புதிதாக கோப்பைகள் வாங்கி பதித்து பொது மக்களுக்கு சுகாதார வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டது. | ரூ.30300/– |
| 3 | மதுக்கரை நகராட்சி 2வது வார்டு அண்ணா சதுக்கம் பகுதி மக்களின் பயன்பாட்டில் இருந்த கழிப்பறையின் கதவுகள் பழுதாகியிருந்தவைகளை உடனடியாக மாற்றம் செய்யவேண்டியதன் அவசர அவசியம் கருதி புதிதாக கதவுகள் வாங்கி மாட்டிக்கொடுத்து பொதுமக்களுக்கு சுகாதார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. | ரூ.16000/– |
| 4 | மதுக்கரை நகராட்சி 23வது வார்டு தர்மராஜா நகர் பகுதியில் அமைந்துள்ள பெண்கள் பொதுக் கழிப்பிடம் பழுதடைந்திருந்ததை சரிசெய்யும் பொருட்டு வெளிப்புற இரும்பு கதவு வாங்கிய மாட்டியதும், உட் புறக்கதவுகள் பழுதடைந்து இருந்ததை சரி செய்து வர்ணம் பூசியது, மராமத்து பணிக்கு மணல் சிமெண்ட் மூட்டைகள் மற்றும் இரும்பு கம்பிகள் வாங்கியது. மேலும் ஆண்கள் கழிப்பறைக்கு புதிய கதவுகள் செய்து வாங்கியது, கழிப்பாறை கோப்பைகள் புதிதாக வாங்கி பதித்தது, கழிப்பாறைக்கு முழுவதும் வர்ணம் பூசியது உள்ள கூலிகள் வழங்கியது உள்பட மொத்த செலவினம் மேற்கொண்டது. | ரூ.52100/– |
| 5 | மதுக்கரை நகராட்சி 3வது வார்டு அறிவொளி நகர் காந்தி சதுக்கம் பகுதியில் கழிவுநீர் கால்வாய் மற்றும் சிறுபாலங்கள் பழுதடைந்திருந்ததால் பொது மக்களின் அன்றாட வாழ்வு பாதிக்காத வகையில் கால்வாய் பழுதினை சரி செய்யும் பொருட்டு சிமெண்ட், எம் சேண்ட்,ஜல்லி, இரும்பு கம்பிகள் உள்ளிட்ட கூலிகள் வழங்கி பணிகளை செய்து முடித்தவகையில் ஏற்பட்ட செலவினம் மேற்கொண்டது. | ரூ.19600/– |

| | | |
|---|---|---|
| 6 | மதுக்கரை நகராட்சி 24 வது வார்டு எம்.ஜி.ஆர் பகுதியில் குடிநீர் குழாய் உடைப்பு ஏற்பட்டு தண்ணீர் வினானதுடன் பொதுமக்களுக்கு குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டதால் இவற்றை சரிசெய்ய கான்கிரீட் சாலையை உடைந்து (Air Breaker) பணிகளை துரிதமாக செய்த வகையில் வாடகை செலுத்திய வகையில் செலவினம் மேற்கொண்டது. | ரூ.28800/– |
| 7 | மதுக்கரை நகராட்சி 24வது வார்டு எம்.ஜி.ஆர் நகர் பகதியில் குடிநீர் குழாய் உடைப்பு ஏற்பட்டு விட்டதால் பொதுமக்களக்கு குடிநீர் விநியோகம் பாதிக்கை உடனடியாக சரிசெய்யும் பொருட்டு குடிநீர் குழாய்கள் பதிக்கும் வேலைகளை ஏழு நாட்கள் செய்த வகையில் கூலிகள் வழங்கிய வகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டது. | ரூ.33600/– |

பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட விபரத்திற்கான அவசர அவசியப் பணிகளை உடனடியாக செய்து முடித்தமைக்கும் அதற்கான செலவினங்களை நகராட்சி நிதியிலிருந்து பட்டுவாடா செய்தமைக்கும் மன்றத்தின் தகவலுக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.877/2022/அ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றத்தில் பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.84</u>**

மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.

(ஒ/ம்) நா. நூர்ஜஹான்
நகர் மன்றத்தலைவர்
மதுக்கரை நகராட்சி

இடம் : மதுக்கரை
நாள் : 30.08.2022

---

//உண்மை நகல் உத்திரவுபடி//

ஆணையாளர்
மதுக்கரை நகராட்சி